கற்பகம்
KATPAKAM
திங்கள் இதழ்
விலை ரூபா 10/-

## குறளமுதம்-11

வள்ளுவர் வாய்மொழியை தெளிவுறத்தரும் எளிதில் பொருளுணர்ந்து படிப்பதற்கு ஏதுவாக “கற்பகம்” தொடர்ந்து குறளமுதைத் தரும்.

**அதிகாரம்-2 - அறத்துப்பால் - வான் சிறப்பு**

“வான்நின்று உலகம் வழங்கி வருதலால்
தான் அமிழ்தம் என்று உணரற் பாற்று ”

*மழையால் உலகம் வாழ்ந்து வருவதால் அம்மழையானது உலக உயிர்களுக்குச் சாவா மருந்து என்று உணரத்தக்கதாகும்.*

மலர்-01 செப்ரெம்பர்-2008 இதழ்-11

# பின்தங்கிய மக்களுக்கு கூட்டுறவு சங்கங்கள் சேவையாற்ற வேண்டும்!

### ஊர்காவற்றுறை நீதிபதி திருமதி ஜோய் மகாதேவன் வேண்டுகோள்!



யாழ் குடாநாட்டில் தீவுப்பகுதி மிகவும் பின்தங்கிய பிரதேசமாக இருக்கிறது. இப் பகுதியிலுள்ள மக்களுக்கு கூட்டுறவுச் சங்கங்களூடாக சேவையாற்றுவதற்கு கூட்டுறவுத் துறையினர் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு யாழ்.மாவட்ட மேலதிக நீதிபதியும் ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிவானுமாகிய திருமதி. ஜோய் மகாதேவன் தெவித்தார்.

யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபையின் ஏற்பாட்டில் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் கூட்டுறவுச்சபைத் தலைவர் பெ.கனகசபாபதி தலைமையில் நடைபெற்ற கூட்டுறவாளர் தினவிழாவில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது,

தீவகத்திலே அனலைதீவு, எழுவைதீவு, நயினாதீவு, நெடுந்தீவு என்று தரைவழித் தொடர்பற்ற மிகவும் பின்தங்கிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

ஒருவர் நோய்வாய்ப்பட்டு விட்டாலோ அல்லது இறந்து விட்டாலோ அது சம்பந்தமான மேலதிக சிகிச்சை மற்றும் பிரேத பரிசோதனைகளுக்கென யாழ்.போதனா வைத்தியசாலையையே நாடவேண்டியுள்ளது. இவ்வாறு யாழ். வைத்தியசாலைக்கு வருவதற்கு வாகனங்களைப் பிடிப்பதற்கு எல்லா மக்களுமே வசதியுள்ளவர்கள் என்று கூறிவிடமுடியாது. இவர்களுக்கான வாகன வசதிப் போக்குவரத்து உதவிகளைக் கூட்டுறவுச் சங்கங்கள் ஒரு சேவையாகச் செய்ய முன்வரலாம் என்று நான் கருதுகின்றேன்.

இதற்கு அந்தந்த ஊரில் வசிக்கும் வசதி படைத்த மக்களும் கூட்டுறவுத் துறையினருடன் கைகோர்த்து இதய சுத்தியுடன் மேற்படி சேவையைச் செய்ய முன்வருவார்களேயானால் இது வெற்றிகரமாக அமையும் என்றும் நான் நம்புகின்றேன்.

இளஞ் சமுதாயத்தினர் கூட்டுறவு என்றால் அதை ஒரு ஏளனமாகப் பார்க்கக் கூடாது. சிறு வயதில் நாம் எல்லோரும் படித்திருக்கிறோம் ஒற்றுமையாக வாழ்ந்தால் எதையும் சாதிக்கலாம் என்று, எனவே கூட்டுறவுத் துறையின் மகுட வாக்கியமாக அமைந்திருக்கின்ற அந்த ஒற்றுமையை நிலைநாட்டுவதற்கு நாம் அனைவரும் ஒற்றுமையாகச் செயற்பட்டு எங்கள் கிராமத்தையும் எங் கள் நாட்டையும் கட்டியெழுப்புவதற்கு முன் வரவேண்டுமெனறும் கேட்டுக்கொண்டார்.

### இளைஞர்கள் கூட்டுறவுத் தலைமைத்துவத்தை ஏற்க முன்வரவேண்டும்!



யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம் கருத்துத் தெரிவிக்கையில், காலத்தின் தேவையை அறிந்து செயலாற்றுவதற்கு இளஞ் சமுதாயம் கூட்டுறவுத்துறையின் தலைமையைப் பொறுப்பேற்க முன்வரவேண்டும்.

கூட்டுறவுத்துறை நிலைக்க வேண்டும் என்று சொன்னால் இளஞ்சமுதாயத்தின் பங்களிப்பு மிக மிக அவசியமாகும். சிக்கன கூட்டுறவுச் 'சங்கத்தில் இளஞ் சமுதாயத்தின் பங்களிப்பு கூடுதலாக

(2ம் பக்கம் பார்க்க)









### சிந்தனைத்துளி

"செய்யவேண்டிய தொழிலை நன்றாகச் சிந்தித்து துணிவாக ஆரம்பியுங்கள், அதுவே எமது வெற்றிக்கு வழிவகுக்கும்" -ஓர் அறிஞர்-

## கற்பகக்கரு

## கால அவகாசம் வேண்டும்!

கூட்டுறவு நிறுவனங்கள் ஓர் கட்டுக்கோப்பான நிறுவனங்கள் என்பதை சகலரும் அறிவார்கள். கூட்டுறவு சட்டங்களுக்கு அமைவாக செயற்பட்டுவரும் கூட்டுறவு நிறுவனங்களை அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் தெரிந்து கொண்டும் அவற்றுக்கு உதவிகள் வழங்குவதில் பின்னடித்த காலம் ஒன்று உண்டு. ஆனால் இன்று அதே அரச சார்பற்ற நிறுவனங்கள் கூட்டுறவு நிறுவனங்களை நாடி அவர்களுக்கு உதவிகள் செய்வதன்மூலம் அவர்களை மட்டுமல்லாது சாதாரண பொதுமக்களின் வாழ்வாதார தேவைகளுக்கு அவர்கள் மூலம் உதவி செய்ய முன்வந்திருப்பது பாராட்டுக்குரியதாகும்.

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அண்மையில் கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற மாவட்ட கூட்டுறவு சபையின் கூட்டுறவாளர் தின விழாவில் உரையாற்றும்போது இதனை பட்டவர்த்தனமாக தெரிவித்துள்ளார்.

கூட்டுறவு நிறுவனங்கள் கட்டுக்கோப்பான சிறந்த முகாமைத்துவம் உள்ள நிறுவனங்களாக செயற்பட்டு மக்களுடைய அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்து வருவதை உணர்ந்த அரச சார்பற்ற நிறுவனங்கள் இன்று கூட்டுறவு நிறுவனங்களை நாடி வருவதாக உதவி ஆணையாளர் தெரிவித்தமையானது கூட்டுறவாளர்களுக்கும் கூட்டுறவு நிர்வாகிகளுக்கும் பணியாளர்களுக்கும் உவகை ஊட்டும் செய்தியாக அமைந்துள்ளது.

அரச சார்பற்ற நிறுவனங்கள் கூட்டுறவு நிறுவனங்களுக்கு உதவிகள் செய்வதற்கு முன்வருகின்றபோது அவ் உதவிகள் பரவலாக மாவட்டத்திலுள்ள சகல அதாவது ப.நோ.கூ. சங்கங்கள், ப.தெ.வ.அ.கூ.சங்கங்கள், ஐக்கிய நாணய சங்கங்கள் , கால்நடை வளர்ப்போர் கூ.சங்கங்கள் மற்றும் கூட்டுறவு என்னும் சுலோகத்தை அடிநாதமாக கொண்டுள்ள நிறுவனங்களுக்கு சென்றடைய வேண்டியது இன்றைய தேவையாகவுள்ளது.

கூட்டுறவு நிறுவனங்களில் பணியாளர்களினதும் நிர்வாகிகளினதும் வினைத் திறனை மேம்பாடடையச் செய்து அவற்றின் மூலம் நவீன தொழில்நுட்ப ரீதியிலான அணுகுமுறைகளை மேற்கொள்வதற்கு வேண்டிய பயிற்சிகளை அளிக்க அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்வந்துள்ளன. நிகொட் எனும் அரச சார்பற்ற நிறுவனம் சகல மட்ட கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்களது வினைத் திறனை மேம்படுத்துவதற்கு பல இலட்சக்கணக்கான ரூபா செலவில் பயிற்சிகளை யாழ்.மாவட்ட கூட்டுறவு சபையினூடாக கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் அனுசரணையுடன் வழங்கப்பட்டு வருவது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

கூட்டுறவுப் பணியாளர்களுக்காக மேற்கொள்ளப்பட்டுவரும் இப்பயிற்சி நெறிகளை கூட்டுறவுச் சங்க நிர்வாகிகளும் பணியாளர்களும் தகுந்த முறையில் பயன்படுத்திக் கொள்ள முன்வர வேண்டும். பயிற்சிகள் எத்தகையதாக இருந்தாலும் அவை இலவசமாக வழங்கப்படுகின்ற போது பயிற்சிபெற உள்ள பயனாளிகள் விரும்பியே பயிற்சிகளை மேற்கொள்கின்றனர். பயிற்சிகளுடைய ஆரம்பம் தொடர்பான அறிவித்தல்கள் அதாவது குறுகிய கால அறிவுறுத்தலாக இல்லாது சம்பந்தப்பட்ட கூட்டுறவு நிறுவனங்கள் பணியாளர்களை பயிற்சிகளுக்கு அனுப்புவதற்கு ஏற்றவாறு கூடிய கால அவகாசம் வழங்க வேண்டும். கால அவகாசத்துடன் அறிவித்தல்கள் வழங்கப்படும் பட்சத்தில் பணியாளர்கள் பயிற்சிகளுக்கு சமூகமளிக்காதிருக்கவோ, நிர்வாகிகள் பயிற்சிகளுக்கு பணியாளர்களை அனுப்புவதில் பின்னிற்கவோ மாட்டார்கள் என்பதை கற்பகம் வலியுறுத்தி நிற்கின்றது.

"அங்கத்தவர்களின் ஆதரவே கற்பகத்தின் பலம்"

-ஆசிரியர்-

# பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின்

# கிளை நிர்வாக நடைமுறை விதிகள்

### 6. அங்கத்துவத் தகுதி:-

**6.1.** உபவிதி 7க்கு அமைவாகவும், பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் தொழிற்பாடுகளில் ஈடுபாடும், அக்கறையும் உள்ளவர்களும், தகுதியுடையவர்கள் எனக் கிளைக்குழுவின் உறுதியையும் சிபார்சினையும் பெற்றவர்கள் இக்கிளைகளில் அங்கத்துவம் பெறத் தகுதியுடையவர்கள்.

**6.2.**வயதெல்லை 18 வருடங்களுக்கு மேற்பட்டவர்கள்.

**6.3.**சங்கத் தொழிற்பரப்பினுள் சங்கத் தொழிற்பாடு சம்பந்தமான தொழில் முயற்சியில் ஈடுபடுபவர்கள்.

**6.4.**இந்நோக்கத்தையுடைய வேறு சங்கங்களில் அங்கத்துவம் பெறாதவர்கள்.

**6.5.**இக்கிளையிலே அல்லது சங்கத்திலோ அல்லது இதை ஒத்த வேறு சங்கங்களிலோ சம்பளம் பெறும் அல்லது வேறு வகையில் ஊதியம் பெறும் பணியாளர் அல்லாதவர்.

**6.6.**இக்கிளை நிர்வாகத்தால் அங்கத்துவம் பெறத் தகுதியுடையவரென உறுதிப்படுத்தப்பட்டு, சங்க நெறியாளர் குழுவினதும், பொதுச்சபையினதும் அங்கீகாரத்தைப் பெற்றவர்.

**6.7.பொது:-**

6.7.1. அங்கத்தவரின் அங்கத்துவ முடிவு, பின்னுரித்தாளிகள், அங்கத்தவரின் உத்தரவாதம், உபவிதி 12,13,19ற்கு அமைவாக கட்டுப்படுவதற்கு ஏற்பாடு செய்தல் வேண்டும்.

6.7.2.அங்கத்தவரின் பங்கு, உரிமை சம்பந்தமாக உபவிதி 17வது பிரிவில் கூறப்பட்டுள்ளபடி ஒழுங்கு செய்தல் வேண்டும்.

### 7. பொதுக்கூட்டங்கள்:

**7.1.** கிளை வருடாந்தப் பொதுக்கூட்டங்கள் வருடமொரு முறை கிளை நிர்வாக சபையில் வெற்றிடங்களை நிரப்பவும், முந்திய ஆண்டின் கிளை நடவடிக்கை அபிவிருத்திகளை பரிசீலிப்பதற்கும் தாய்ச் சங்கத்தின் பொதுக் கூட்டத்திற்கு முன்னதாக உபவிதிக்கு அமைவாக கூட்டப்படல் வேண்டும்.

**7.2.** தேவை ஏற்படும்போது பொதுச்சபை விசேட காரணங்களுக்காக கூட்டப்படலாம்.

**7.3.** கிளைத் தலைவர் அல்லது தாய்ச் சங்கத்தின் தலைவர் சங்க நெறியாளர் குழு அல்லது கிளைப் பொதுச்சபையின் 1/4 பங்கு அல்லது 25க்கு குறையாத அங்கத்தவர்கள் பொதுக் கூட்டத்தைக் கூட்ட அழைப்பு விடும் பட்சத்தில் 5 நாளுக்கு குறையாத முன்னறிவித்தலுடன் கூட்டலாம்.

**7.4.** உபவிதியில் அதிகாரமளிக்கப்பட்ட விதத்தில் கூட்டுறவு ஆணையாளருக்கோ அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்டவருக்கோ கிளைப் பொதுக்கூட்டங்களையும் அழைக்கும் அதிகாரம் உண்டு.

### 8. கிளைப் பொதுக்கூட்டத்தின் அதிகாரங்கள்:-

**8.1.** கிளைக்குழு ஊடாக விண்ணப்பித்த அங்கத்தவர் தகுதி பற்றி ஆராய்ந்து ஏற்றுக்கொள்ளல், நிராகரித்தல், ஏற்கனவே சேர்ந்த தகுதியற்றவர் அங்கத்துவத்தை இரத்துச் செய்தல்.

-வளரும்-

### பின்தங்கிய.............

(1ம் பக்க தொடர்ச்சி)

இருந்தாலும் ஏனைய சங்கங்களில் உதாரணமாக ப.நோ.கூ.சங்கங்களில் 18-35 வயதுக்கு இடைப்பட்ட இருவர் சங்க நெறியாளர் குழுவில் இருக்க வேண்டுமென்ற கட்டுப்பாடு இருந்தாலும் அந்த இருவரைத் தேடிப்பிடிப்பதென்பதே பெரும் கஷ்டமாகும்.

அரசாங்கம் இந்த நடைமுறையை ஏன் கொண்டுவந்ததென்று சொன்னால் இந்த இளஞ் சமுதாயத்தை கூட்டுறவுத் துறையிலே ஈடுபடுத்தி அவர்களிடம் தலைமைத்துவத்தை கையளித்து அவர்கள் கூட்டுறவு நிர்வாகத்தை சரியான முறையில நிர்வகிக்க வேண்டும் என்பதற்காகத்தான்.

நாங்கள் கூட்டுறவுத் துறையூடாக பலதரப்பட்ட பயிற்சிகளையும் குறிப்பாக அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் பல பயிற்சிகளை அளித்து வருகின்றோம். இதில் இளஞ்சமுதாயத்தினர் ஈடுபடுவது மிகவும் குறைவாகவேயுள்ளது. இது எமக்கு மிகுந்த வேதனையைத் தருவதோடு, எதிர்காலத்தில் கூட்டுறவுத் துறையின் தலைமைத்துவத்தை ஏற்க ஆட்கள் இல்லாமல் போய்விடுமோ என்ற அச்சத்தையும் தோற்றுவித்துள்ளது.

தற்போதைய நிலையில் ஒரு கூட்டுறவு சங்கத்துக்கு ஒரு தலைவரைத் தேடிப் பிடிப்பதென்பது மிகவும் கடினமானதொரு விடயமாக அமைந்திருக்கிறது. நாட்டுச் சூழல் ஒரு பக்கம் இருந்தாலும் சில சமயங்களில் தலைமைத்துவத்தைப் பொறுப்பேற்பதென்பது சிக்கல் நிறைந்த பணி என்று ஒருவரும் அப்பதவியைப் பொறுப்பேற்க முன்வருவதில்லை. இது மாறவேண்டும், எதிர்காலத்தில் கூட்டுறவுத் துறையைக் கட்டியெழுப்ப அனைவரும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும்.

## வடமாகாண ப. தெ. வ. அ. கூ. ச. சமாசம் அங்கத்துவ சங்கங்களின் அங்கத்தவர்களுக்கு முதல் கட்டமாக வழங்கிய மாதாந்த ஒய்வூதியத்தைப் பெற்றவர்களை காணலாம்.

### அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்


க.கந்தசாமி


அ.பாலசிங்கம்


சி.சிங்கராசா


செ.சிவராசா


வ.தாமோதரம்பிள்ளை


ந.இரத்தினம்



சி.முருகேசு


ப.பொன்னையா



க.கோபாலு

### சாவகச்சேரி ப.தெ. வ. அ. கூ. சங்கம்


மா.கிருஷ்ணன்


மா.பொன்னன்


க.கிருஷ்ணன்


சி.குஞ்சன்


சி.கந்தையா

### அரியாலை ப.தெ. வ. அ. கூ. சங்கம்


சி.சின்னராசா


சி.நாகலிங்கம்


த.சிவலிங்கம்

### ஊர்காவற்றுறை ப.தெ.வ.அ. கூ.சங்கம்


வி.இராசரத்தினம்

### கோண்டாவில் பனை தென்னை வள அ. கூ. சங்கம்


மு.மாணிக்கவாசகர்


வீ.பாலசிங்கம்


க.மார்க்கண்டு


சி.வடிவேலு


த.நவரத்தினம்


வீ.அப்புத்துரை


க.தம்பித்துரை


சி.பாலசிங்கம்

### பருத்தித்துறை ப.தெ. வ.அ.கூ.சங்கம்


செ.வேதநாயகம்


சி.இரத்தினம்

### கோப்பாய் ப.தெ. வ.அ.கூ.சங்கம்


சி.இரத்தினம்


த.தேவராசா

# கோண்டாவில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

## கொத்தணி மட்டத்தில் நடத்தப் பட்ட கூட்டுறவுதின போட்டி களில் எமது சங்கம் பெற்றுக் கொண்ட வெற்றிகள்

**உறுப்பினர் பேச்சுப் போட்டி**
- திரு.அ.சின்னராசா -2ம் இடம்

**பணியாளர் பேச்சுப் போட்டி**
- திரு.தா.தவச்செல்வன் -1ம் இடம்

**மகளிர் பேச்சுப் போட்டி**
- திருமதி கா.சந்திரவதனி-1ம் இடம்
- செல்வி அ.ஜென்சியா -3ம் இடம்

**முன்பள்ளி ஆசிரியர் பேச்சுப் போட்டி**
- திருமதி கா.சந்திரவதனி-1ம் இடம்
- செல்வி செ.சிவலோஜினி-3ம் இடம

**உறுப்பினர் கவிதைப் போட்டி**
- திரு.சி.அருமைத்துரை -1ம் இடம்

**பணியாளர் கவிதைப் போட்டி**
- திரு.தே.தவராசா -1ம் இடம்
- திரு.தா.தவச்செல்வன் -2ம் இடம்

**மகளிர் உறு. கவிதைப் போட்டி**
- திருமதி கா.சந்திரவதனி-1ம் இடம்
- செல்வி அ.ஜென்சியா -2ம் இடம்
- செல்வி அ.சரண்யா -3ம் இடம்

**முன்பள்ளி ஆசிரியர் கவிதைப் போட்டி**
- செல்வி.செ.சிவலோஜினி-1ம் இடம்

**உறுப்பினர் கட்டுரைப் போட்டி**
- திரு. செ.செல்வராசா -2ம் இடம்
- திரு.சி.அருமைத்துரை -3ம் இடம்

**பணியாளர் கட்டுரைப் போட்டி**
- திரு.தா.தவச்செல்வன் -2ம் இடம்

**மகளிர் உறு. கட்டுரைப் போட்டி**
- திருமதி கா.சந்திரவதனி-2ம் இடம்
- செல்வி ஜெ.குயின்சிகா -3ம் இடம்

**முன்பள்ளி ஆசிரியர் கட்டுரைப் போட்டி**
- திருமதி ம.மன்றோ மக்ரலின் -1ம் இடம்
- செல்வி செ.சிவலோஜினி -3ம் இடம்

**சிறந்த உறுப்பினர் தெரிவு**
- திரு.செ.செல்வராசா -கிளை 35
- திரு.சி.வடிவேலு -கிளை 32
- திரு.சி.அருமைத்துரை -கிளை 29

**சிறந்த பணியாளர் தெரிவு**
- திரு.ந.சிறீஸ்வரன் -காசாளர்
- திரு.கி.வசந்தகுமார் -இலிகிதர்
- திரு.செ.ஜஸ்ரீபன் -கிளை முகாமையாளர்

**சிறந்த சங்கம் தெரிவு**
- 2ம் இடம்

**௬0 வயது பூர்த்தியடைந்த உறுப்பினர் கௌரவிப்பு**
- திரு.க.தம்பித்துரை -கிளை 29
- திரு.மா.சுப்பிரமணியம் -கிளை 37

**கயிறு இழுத்தல் போட்டி**
- 2ம் இடம்

**கலந்துகொண்டவர்கள்:-**
- திரு.ச.சந்திரராசா -கிளை 34-உறு.
- திரு.சி.விஜயரூபன் -கிளை 28-உறு.
- திரு.மா.சிவகுமார் -கிளை 29-உறு.
- திரு.செ.அரவிந்தன் -கிளை 33-[illegible]
- திரு.நா.ரவிச்சந்திரன் -கிளை 33-உறு.
- திரு.நா.உதயகுமார் -கிளை 32-உறு.
- திரு.செ.சிவஞ்ஞானம் -கிளை 31-உறு.
- திரு.ச.குகேந்திரராசா -கிளை 34-உறு.
- திரு.ந.பிரதீபன் -கிளை 34-உறு.
- திரு.மா.சூரியகுமார் -கிளை 33-உறு.



சங்கத் தலைவர் உரையாற்றுகிறார்.


பொதுமுகாமையாளர் உரையாற்றுகிறார்.


கல்வி உத்தியோகத்தர் பரிசில் வழங்குகிறார்


முன்பள்ளி ஆசிரியை ஒருவர் கவிதை வழங்குகிறார்.


பேச்சுப் போட்டியில் கலந்து கொண்டுள்ள சிறுமி


பரிசில் பெற்ற கோலம்

# கூட்டுறவுதின விழா சிறப்புமலர் - 2008

## சங்க மட்டத்தில் நடத்தப்பட்ட கூட்டுறவுதின போட்டிகளில் வெற்றி பெற்றவர்கள்

### உறுப்பினர்களுக்கான பேச்சுப் போட்டி
- திரு.சி.அருமைத்துரை -1ம் இடம்
- திரு.செ.செல்வராசா -2ம் இடம்
- திரு.அ.சின்னராசா -3ம் இடம்

### பணியாளர்களுக்கான பேச்சுப் போட்டி
- திரு.தா.தவச்செல்வன் -1ம் இடம்
- திரு.தே.தவராசா -2ம் இடம்
- திருமதி ச.பஸ்மாதேவி -3ம் இடம்

### மகளிர் உறுப்பினர் பேச்சுப் போட்டி
- திருமதி.கா.சந்திரவதனி-1ம் இடம்
- செல்வி.அ.சரண்ஜா -2ம் இடம்
- செல்வி.அ.ஜென்சியா -3ம் இடம்

### முன்பள்ளி ஆசிரியர் பேச்சுப் போட்டி
- செல்வி.செ.சிவலோஜினி -1ம் இடம்
- செல்வி.ம.ஜெயமாலினி -2ம் இடம்
- செல்வி.து.சர்மினி -3ம் இடம்
- திருமதி.ம.மன்றோமக்ரலின்-3ம் இடம்

### முன்பள்ளி மாணவர்கள் பேச்சுப் போட்டி
- செல்வி.பா.மதுஷாலினி -1ம் இடம் *(சித்தி அம்பாள்)*
- செல்வி.இ.கிருஷாலினி -2ம் இடம் *(சித்தி காளி அம்பாள்)*
- செல்வன்.இ.கரிப்பிரகாஷ்-3ம் இடம் *(சித்தி புவனேஸ்வரி)*

### உறுப்பினர் கவிதைப் போட்டி
- திரு.சி.அருமைத்துரை -1ம் இடம்
- திரு.செ.செல்வராசா -2ம் இடம்
- திரு.அ.சின்னராசா -3ம் இடம்

### பணியாளர் கவிதைப் போட்டி
- திரு.தே.தவராசா -1ம் இடம்
- திரு.தா.தவச்செல்வன் -2ம் இடம்
- திரு.த.இராதாகிருஷ்ணன்-3ம் இடம்

### மகளிர் உறுப்பினர் கவிதைப் போட்டி
- திருமதி.கா.சந்திரவதனி-1ம் இடம்
- செல்வி.அ.சரண்ஜா -2ம் இடம்
- செல்வி.அ.ஜென்சியா -3ம் இடம்

### முன்பள்ளி ஆசிரியர் கவிதைப் போட்டி
- செல்வி.செ.சிவலோஜினி-1ம் இடம்
- செல்வி.து.சர்மினி -2ம் இடம்
- செல்வி.இ.நிலாவதனி -3ம் இடம்

### முன்பள்ளி மாணவர் பாட்டுப் போட்டி
- செல்வன்.சு.சுஜீபன் -1ம் இடம் *(சித்தி அம்பாள்)*
- செல்வி.பு.றிசானா -2ம் இடம் *(ஞானப்பிரகாசம்)*
- செல்வி.ச.தனுசிகா -3ம் இடம் *(சித்தி காளி அம்பாள்)*


### உறுப்பினர்களுக்கான பொது அறிவுப்போட்டி
- திரு.சி.அருமைத்துரை -1ம் இடம்
- திரு.செ.செல்வராசா -2ம் இடம்
- திரு.அ.சின்னராசா -3ம் இடம்

### பணியாளர்களுக்கான கட்டுரைப்போட்டி
- திரு.தா.தவச்செல்வன் -1ம் இடம்
- திரு.தே.தவராசா -2ம் இடம்
- திரு.ந.சிறீஸ்வரன் -3ம் இடம்

### மகளிர் உறுப்பினர் கட்டுரைப் போட்டி
- திருமதி.கா.சந்திரவதனி-1ம் இடம்
- செல்வி.அ.சரண்ஜா -2ம் இடம்
- செல்வி.சி.சுஜாத்தா -3ம் இடம்

### முன்பள்ளி ஆசிரியர் கட்டுரைப் போட்டி
- செல்வி.செ.சிவலோஜினி-1ம் இடம்
- செல்வி.ந.சுபிதா -2ம் இடம்
- செல்வி.ம.ஜெயமாலினி -3ம் இடம்

### கோலம் போடுதல் போட்டி
- செல்வி.சி.தர்சினி (மக.குழு உ.) -1ம் இடம்
- செல்வி.பா.அனுலா(மக.குழு உ.) -2ம் இடம்
- செல்வி.பா.கேமநிலா(மக.குழு உ.)-3ம் இடம்
- செல்வி.ந.சுபிதா (மு.ப.ஆசிரியர்) -3ம் இடம்

கூ.அ.உ.ஆணையாளர், கூ.அ.உத்தியோகத்தர், மா.கூ. அ.உத்தியோகத்தர், சி.வை.கூ.ச.தலைவர் ஆகியோர் உரையாற்றுவதையும், விழாவில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.





## எதிர்காலம்

காலமிது காலமிது
கற்றுவிடு மகளே!
காலமிதைத் தவறவிட்டால்
கற்பதெப்போ மகளே!

தந்தை வயதாகு முன்னே
உந்தனை நீ உயர்த்தி விட்டால்
தாயவளின் மனம்கூட
தேயாது நின்றுவிடும்

எதிர்காலம் எவ்வெவர்க்கும்
எளிதாக இருந்திடாது
விழித்திருந்து நீ படித்தால்
களிப்படைவாய் வாழ்க்கையில்

உந்தனை நீ உயர்த்தி விட்டால்
உழைப்பதற்கும் வழி பிறக்கும்
முதுமையிலே எங்களுக்கும்
மூவேளை உணவளிப்பாய்!

குடும்பமாய் ஆகிவிட்டால்
கூடி நீர் உழைத்து விட்டால்
குதூகலமாய் வாழ்ந்திடலாம்
குழந்தைகளும் பெற்றிடலாம்.

## பட்ட கடன்

காலமெது காலமெது
கடன்பட்ட காலமெது
உடனிருந்தே துன்பங்கள்
உடலைத் துளைக்கிறதே!

இப்பிறப்பில் பட்டகடன்
ஏதுமுண்டோ நானறியேன்
முற்பிறப்பில் பட்டகடன்
முழுமையாய் வந்ததுவோ!

உலகறிந்த நாள்முதலாய்
உலவி வந்தேன் நேர்வழியில்
நேர்ந்த கதி நினைக்கையிலே
நெருப்பாகுறதே என்மனது!

துன்பங்கள் தொடர்வதுவும்
துயரங்கள் தொடர்வதுவும்
விட்டவனின் கட்டளையே
கட்டளையை மீறாது
கடைசிவரை நின்றுவிட்டால்
விட்டவனே விடை பகர்வான்

இ.காந்தன்
கோப்பாய் ப.தெ.வ.அ.கூ.ச.

## வாழ்க கூட்டுறவு வளமுடன்!

வாழ்க கூட்டுறவு வளமுடன்
வளர்க என்றும் அது நலமுடன்
மிளிர்க கூட்டுறவு மிடுக்குடன்
துளிர்க என்றும் அது துடுக்குடன்

உழைப்பவர் பரம்பரையின்
உற்ற தோழனாம்
உண்மையின் வெற்றிக்கு
உரமான கூட்டுறவே
வாழ்க என்றும் வளமுடன்!

நாட்டுயர்வின் நலன் காக்க
நம்மிடையே தோன்றி நிதம்
நல்ல பல வழி காட்டும்
நம் இனிய கூட்டுறவே
வாழ்க என்றும் வளமுடன்!

சிக்கனம் சேமிப்பு கடனுதவி
கல்வி பயிற்சி முன்பள்ளி
என்றும் பல சேவைகளை
எமக்கெனவே தந்தெமது
வாழ்வு தனை வளமாக்க
வாழ்க கூட்டுறவு வளமுடன்!

-செ.சிவலோஜினி-
முன்பள்ளி ஆசிரியை
கோண்டாவில் ப.தெ.வ.அ.கூ.ச.

சமூக மேம்பாட்டினை
கூட்டுறவுக் கொள்கைகளில் ஒன்றாய்க்
கொண்டு எங்கள் சமூக வளர்ச்சிக்காய்
சத்தான வழி வகுத்து
சாதனைகள் புரியும் எங்கள்
கூட்டுறவு வாழ்க வளமுடன்

சுதந்திரம் ஜனநாயகம்
சுயதொழில் ஒத்துழைப்பு
தடையற்ற அங்கத்துவம்
பொருளாதார பங்களிப்பு
சமூக மேம்பாடு என
சத்தான கொள்கைகளுடன் எங்கள்
வாசல் வரை வந்து சேவகம் செய்யும்
கூட்டுறவு வாழ்க வளமுடன்!

நல்லெண்ணம் பரஸ்பரம்
விடாமுயற்சி கடனுதவுதல்
சிக்கனம் சேமிப்பு ஒற்றுமை ஐக்கியம்
ஒன்றுபடல் உதவி செய்தல்
இவை எல்லாம் சிந்தனைகளாய்
செதுக்கி வைத்துச் சேவை செய்யும்
வாழ்க கூட்டுறவு வளமுடன்!

## கவியருவி

## பெண்



நாவலர் விதுனா

பாரினிலே
பெண்ணெனப் பிறந்துவிட்டால்
பலர் கண்கள் எம்மீதுதான்!
பெண்ணென்றால் பேயும் இரங்குமாம்
கற்காலத்தில்!
பெண்ணையே பேயெனக் கொண்டவர்
இக்காலத்தில்!

"பெண்"
எத்தனை அர்த்தங்கள்-இந்த
ஒற்றைச் சொல்லுக்கு!
அன்பு!அழகு!தாய்மை!அடக்கம்!
என்கின்ற சமூகம் இதுவல்ல!
அடிமை!ஆதிக்கம்!கொடுமை!
அநியாயம் - என்பதுதான்
இன்றைய சமூகம்!
ஏன் இந்த அவலம்
பெண்ணுக்கு மட்டும்?
எதில் குறைந்துவிட்டாள் பெண்?
அறிவில்லையா-கல்பனா சால்வாபோல்?
அழகில்லையா-ஐஸ்வர்யாராய் போல்?
ஆதிக்கமில்லையா-சந்திரிகா போல?
அன்பில்லையா-அன்னை தெரேசா போல்?

இத்தனையும் இருந்தாலும்
பெண்ணெனப் பிறந்துவிட்டால்
எத்தனை தடைகள்!
எத்தனை சுமைகள்!
எத்தனை பழிபாவங்கள்!
எத்தனை குறை குற்றங்கள்!

மாற வேண்டும்-பெண்களே நாம்
மாற்ற வேண்டும் இதை!
வீறு கொண்டு விரைந்தெழுவீர்!
பாரதியின் புதுமைப் பெண்ணைப்போல்!
இனிவரும் சமூகமாவது எம்மை
வீரப் பெண்களாய் பார்க்கட்டும்!!!

## விலங்கு



விழிகளுக்கு விலங்கிட்டேன்
உனைப் பார்க்காதே என்று
உதடுகளுக்கு விலங்கிட்டேன்
உன்னோடு பேசாதே என்று
கால்களுக்கு விலங்கிட்டேன்
உனைத் தேடிப் போகாதே என்று
விரல்களுக்கு விலங்கிட்டேன்
உன் தொலைபேசி எண்ணைச் சுழற்றாதே என்று
கைகளுக்கு விலங்கிட்டேன்
உனக்கு மடல் வரையாதே என்று
என்னை விலங்கு எனப் பலரும் விமர்ச்சிக்க
நீயும் விலக்கி விட்டதால்
நான் பல விலங்குடனே
மனப்போராட்டம் நடத்துகிறேன் இங்கே
-இருந்தும்-
விடிகாலை வேளையில் புன்முறுவல் பூக்க
உன் முகம் காட்டும் கனவிற்கும்
யாரும் விதைக்காது விருட்சமான
உன் மீது கொண்ட அன்புக்கும்
எந்த விலங்கிடவும் என்னால் முடியவில்லை-ஆம்
எந்த விலங்கினாலும்
உன்மீது கொண்ட அன்புக்கு விலங்கிட முடியவில்லை
எனவே நானே இங்கு விலங்கானேன்

கி.துவம்

## அன்றும் இன்றும்

தே.துவாராசா,
கோண்டாவில்
ப.தெ.வ.அ.கூ.ச.



அன்றொரு நாள்
பஸ் நிலையத்தில் பெண் ஒருத்தி
பார்க்கப் பச்சைப் பசேலென
தள தளக்கும் மேனி மிடுக்குடன்
வாலிப மட்டங்கள் சில
வட்டமிட அவளை
'றேற்' றுகள் பேசப்பட்டு
ஆட்டோவில் ஏறி எங்கேயோ
தொலைந்த போயினர்........
-இன்று-
அதே பஸ் நிலையம்
அதே பெண் - வரண்ட பூமியாய்
பொலிவிழந்து தொந்து நூலாகி-அவளை
வட்டமிட வாலிபரில்லை
'றேற்' பேச முன்வருவாருமில்லை-அதனால்
வட்டமிடுகிறாள் எங்களை
"ஐயா தர்மம் போடுங்க சாமி.."

# எமது வறுமையை நீக்கிய தொழிலை மறக்கமாட்டேன்!

**அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினர் சின்னத்தம்பி-புவனேஸ்வரன் அவர்களின் வாழ்க்கைப் பயணத்தில் சீவல் தொழில் மூலம் ஏற்பட்ட வளர்ச்சிப் படிகள் தொடர்பாகவும் சங்கத்தில் இணைந்து தொழிற்பட்டதால் ஏற்பட்ட மாற்றங்கள் தொடர்பாகவும் கற்பகத்திற்காக அவர் வழங்கிய கருத்துக்கள்.**

கேள்வி :புவனேஸ்வரன், முதலில் உங்களைப் பற்றி சுருக்கமாக கூறுங்கள்.

பதில் :நாங்கள் ஐந்து சகோதரர்கள், மூன்று ஆண்கள், இரண்டு பெண்கள், நானே மூத்தவன் எனது தாய் தந்தையர் தமது விருப்பப்படியே முறைப்படி என்கு திருமணம் செய்து வைத்தனர். எனக்கு மூன்று பிள்ளைகள், மூத்தது இரண்டும் மகள், இளையது மகன். தற்போது மகன் மட்டும் தரம் 8ல் கல்வி கற்று வருகின்றார். மூத்த மகள் திருமணம் முடித்துவிட்டார். எனது பொருளாதாரம் குறிப்பிட்டுக் கூறக்கூடியளவிற்கு சிறப்பானதாக அமைந்திருப்பதற்கு நான் செய்து வருகின்ற சீவல் தொழிலே காரணம்.

கேள்வி :எவ்வாறு இத் தொழிலில் காலடி வைத்தீர்கள்?

பதில் :ஆரம்பத்தில் கூலி வேலை செய்து வந்தேன். அதில போதியளவு வருமானம் கிடைக்கவில்லை, ஒழுங்காக வேலையும் கிடைக்கவில்லை, குடும்பப் பொறுப்பு என்னை இந்தச் சங்கத்தில் இணையத் தூண்டியது. சங்கத்தில் 1985ம் ஆண்டு இணைந்து இன்றுவரை தொழில் செய்து வருகிறேன்.

கே :சங்கத்தில் இணையும்போது உங்களின் வயது என்ன? அப்போது திருமணம் செய்திருந்தீர்களா?

ப :சங்கத்தில் இணையும்போது எனக்கு 20 வயது, திருமணமான பின்னரே சீவல்தொழில் செய்ய ஆரம்பித்தேன்.

கே :நீங்கள் ஆரம்பத்தில் தென்னை மரம் மட்டுமா சீவல் செய்தீர்களா?

ப :இல்லை, ஆரம்பத்திலிருந்தே தென்னை, பனை மரங்கள் இரண்டுமே சீவல் செய்து வந்தேன். தற்போது தென்னை மரம் மட்டும் சீவல் செய்து வருகின்றேன்.

கே :நீங்கள் சங்கத்தில் இணைந்த காரணம்?

ப :ஆரம்ப காலத்தில் கஷ்டத்தின் நிமித்தம் சீவல் தொழில் செய்ய எண்ணினேன். அப்போது எமது சங்கம் பதிவு செய்யப்பட்டு நல்லமுறையில் இயங்கி வந்தது. எனவே, இச்சங்கத்தில் இணைந்து தொழில் புரியத் தொடங்கினேன்.

கே :ஆரம்பத்தில் சீவல் தொழில் செய்யும்போது சங்கம் ஒரு போத்தலுக்கு எவ்வளவு ரூபா வீதம் கொடுப்பனவு வழங்கியது,

ப :போத்தல் ஒன்றுக்கு ரூபா 7.50 தென்னங்கள்ளுக்கு வழங்கப்பட்டு வந்தது. ஆனால் பருவ காலத்தில் விலைக் குறைப்பு செய்யப்படுவதுண்டு.

கே :இதுவரை ஏதாவது விபத்து பாதிப்புக்கு உள்ளாகியுள்ளீர்களா?

ப :இல்லை.

கே :இத்தொழில்மூலம் போதியளவு வருமானம் கிடைக்கின்றதா?

ப :சங்கத்தில் இணைந்து தொழில் செய்யத் தொடங்கிய காலத்திலிருந்தே திருப்தியான வருமானம் கிடைக்கின்றது.

கே :நீங்கள் உற்பத்தி செய்யும் கள்ளைசங்கம் முழுமையாக கொள்வனவு செய்து வந்துள்ளதா?

ப :ஆம், ஆனால் ஆரம்ப காலத்தில் வடிசாலை இல்லாத குறைபாட்டினால் பருவ காலத்தில் கள்ளை ஊற்றி அதற்கான கழிவை (ஊற்றுக்கழிவு) சங்கம் எம்மிடமிருந்து அறவிட்டது.

கே :கள்ளை ஊற்றுவதால் உங்களுக்கு பாதிப்பு இல்லையா?

ப :ஊற்றுவதால் தாக்கம் இருந்த போதும், அனைத்து உறுப்பினர்களிடமிருந்தும் அதாவது, கிளை ரீதியாக இல்லாது சங்கத்தில் தொழிற்பட்டுக் கொண்டிருக்கும் முழு உறுப்பினர்களிடமிருந்தும் கொள்வனவு விகிதாசாரப்படி கழிவுகள் பெறப்படுவதால் எமக்கு பெரியளவில் தாக்கம் ஏற்படுவதில்லை.

:தற்போது சங்கத்தின் செயற்பாட்டினால் சாதகமான சூழ்நிலை இருப்பதை உணருகின்றீர்களா?

ப :ஆம், சங்கத்தில் கட்டாய சேமம், மற்றும் விபத்து ஓய்வூதிய நலத்திட்டம், புலமைப் பரிசில் திட்டம், வங்கிச் செயற்பாடு என்பவற்றின் மூலம் உறுப்பினர்களாகிய எமக்கு பணியாளர்களைவிட அதிக நன்மை கிடைப்பதை உணர்கிறோம்.

**நேர்காணல்: சு.ஸ்ரீகாந்**
**கல்வி உத்தியோகத்தர், அச்சுவேலி.ப.தெ.வ.அ.கூ.ச.**

கே :சமாச செயற்பாட்டின் மூலம் ஏதாவது நன்மைகள் கிடைக்கின்றனவா,

ப :சமாச செயற்பாட்டில் விபத்து ஓய்வூதியத்திட்டம் மற்றும் புலமைப்பரிசில் திட்டம் என்பன நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

கே :புலமைப் பரிசில் திட்டம் மூலம் உங்கள் பிள்ளைகளுக்கு ஏதாவது உதவு தொகை கிடைக்க வாய்ப்புள்ளதா?

ப :வாய்ப்புக்கள் உள்ளது, ஆனால் எனது பிள்ளைகள் எவரும் இதுவரை புலமைப் பரிசில் சித்தி அடையவில்லை.

கே :மேற்பார்வை நடவடிக்கையின்போது மேற்பார்வையாளர்கள் அடிக்கடி வந்து பார்வையிடுவதால் உங்கள் மனதில் ஏதாவது தாக்கம் ஏற்படுவதுண்டா?

ப :அவ்வாறு ஏற்படுவதில்லை, நான் ஒழுங்காக தொழில் செய்கின்றேன். அவர்கள் தமது கடமையை செய்கின்றார்கள், அவ்வளவுதான்.

கே :சங்கம், கிராமிய வங்கி ஆரம்பித்தபின் ஏதாவது நன்மைகள் கிடைத்துள்ளதா? எவ்வாறான நன்மைகள்?

ப :ஆம்,மிகப் பெரியளவிலான நன்மை கிடைத்துள்ளது. எமது சேமிப்பு அதிகரித்துள்ளது. இலகுவாக கடன் பெறக்கூடியதாக உள்ளது. விரும்பிய நேரத்தில் பணம் பெறக்கூடியதாக உள்ளது. அது மட்டுமல்லாது, இணையாக கணக்கு திறந்ததன் மூலம் எனது மனைவியே வங்கி சென்று பணம் எடுக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது. இதனால் எனது வேலைப் பழு குறைக்கப்பட்டுள்ளது.

கே :சங்கத்தின் செயற்பாடுகள் மூலம் நீங்கள் விசேடமாக கௌரவிக்கப்பட்டுள்ளீர்களா?

ப :சமாசத்தால் சிறந்த அங்கத்தவராக பதக்கம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளேன்.

கே :சங்கத்தின் அனுசரணையில் நடைபெறும் முன்பள்ளியில் தங்கள் பிள்ளைகள் எவராவது கல்வி பயிலுகின்றனரா?

ப :ஆம், சங்கத்தின் அனுசரணையில் நடைபெறும் ஜனசக்தி முன்பள்ளியில் எனது மூன்று பிள்ளைகளும் பயின்றுள்ளனர்.

கே :தற்போதைய நிலையில் மரம் மட்டுப்படுத்தி இருப்பதால் ஏதாவது தாக்கம் உள்ளதா?

ப :ஆரம்பத்தில் இருபது மரம் வழங்கினர். தற்போது பதினைந்து மரங்களுக்கு மட்டுப்படுத்தி உள்ளனர். நான் வேறு பகுதி தொழில் செய்யாது முழுநேர சீவல் தொழிலாளியாக இருப்பதால் மட்டுப்படுத்தியது தாக்கமாக இருந்தாலும், தற்போதைய நிலையில் சங்கத்திற்கு கட்டுப்பட்டு தொழில் செய்வதால் வடிசாலை கழிவு குறைக்கப் பட்டுள்ளது.

கே :இத்தொழில் செய்வதன் மூலம் சமூக அந்தஸ்து குறைவடைகின்றது என்ற கருத்து உங்களுக்கு ஏற்பட்டுள்ளதா? உங்கள் பிள்ளைகள் அவ்வாறு உணர்கின்றனரா?

ப :இல்லை, இத்தொழில் செய்வதன் மூலம் பொருளாதாரத்தில் மனதிற்கு திருப்தியான அளவு வளர்ச்சி அடைந்துள்ளேன். எனது பிள்ளைகளும் இதனை உணரத்தக்க முறையில் அவர்களை வளர்த்துள்ளேன்.

கே :தொடர்ந்து இரண்டு வருடம் சிறந்த அங்கத்தவராக தெரிவு செய்யப்பட்டுள்ளீர்கள், இது பற்றி உங்கள் கருத்து என்ன?

ப :சங்கத்தாலே எனக்கு இந்த பாராட்டு கிடைத்துள்ளது. ஒரு தடவை சமாசத்தால் தங்கப் பதக்கம் வழங்கப்பட்டுள்ளது. இதையிட்டு நான் பெருமையடைகின்றேன்.

கே :சங்கத்தின் நிர்வாக உறுப்பினராக செயற்பட்டுள்ளீர்களா?

ப :இல்லை, சங்கத்தின் கிளைக்குழு நிர்வாகத்தில் நீண்டகாலமாக செயற்பட்டு வருகின்றேன்.

கே :தற்போது சமாச விபத்து நலத்திட்டம் ஓய்வூதியமாக மாற்றப்பட்டுள்ளது. ஓய்வூதியம் பெற்ற பின்னரும் தொழில் செய்வீர்களா? (8ம் பக்கம் பார்க்க)

## எமது வறுமையை ..........

7ம் பக்க தொடர்ச்சி

ப :வலுவிருந்தால் நிச்சயமாக தொழில் செய்வேன். பிள்ளைகள் வெளிநாடு சென்று பொருளாதார ரீதியாக வளர்ச்சி அடைந்தாலும் நான் இத்தொழிலை செய் வேன். எமது வறுமை நிலை நீக்கி இந்நிலைக்கு வரக் காரணம் இத்தொழில். அதை நான் மறக்க மாட்டேன்.

கே :சங்கத்தின் சட்ட திட்டங்கள், ஒழுங்கு விதிகளால் நீங்கள் தொழில் செய்வதற்கு ஏதாவது இடையூறுகள் உள்ளதா?

ப :அவ்வாறு எதுவுமில்லை.

கே :சங்கம் புதிய திட்டங்களை உருவாக்கும் போது உங்கள் பங்களிப்பு எவ்வாறு அமையும்?

ப :முழுமையனதாக அமையும், அத்தோடு, சேர்ந்து செயற்படுவேன்.

கே :தற்போது கொள்வனவுச் சம்பளம் முழுமையாக கிடைக்கின்றதா?

ப :ஆம்.

கே :சங்கத்தில் ஏதாவது கடன் பெற்றுள் ளீர்களா?

ப :ஆம், வங்கியில் சேமித்த பணம் எனது மகளின் திருமணத்திற்கு போதாதிருந்த மையால் கட்டாய சேமத்திற்கு எதிராக கடன் பெற்று எனது மகளின் திருமணத்தை நடத்தியுள்ளேன்.

கே :1995ம் ஆண்டு கால இடப்பெயர்வின் போது சங்கம் தங்களிற்கு ஏதாவது உதவி செய்துள்ளதா?

ப :இடப்பெயர்வு காலத்தில் நிர்க்கதியாய் நின்றபோது சங்கத்தின் மேற்பார்வையா ளரும் உத்தியோகத்தரும் எம்மை தேடி வந்து சந்தித்து, கொள்வனவு சம்பளம் மற்றும் ஒரு தொகையை முற் பணமாக வழங்கினர். அப்போது எமக்கு மிகவும் கஷ்டமான நிலையில் அடுத்து என்ன செய்வதென்று தெரியாது தவித்த வேளை இந்த உதவி பேருதவியாக அமைந்தது எம் வாழ்வில் மறக்க முடியாத ஒன்று.

கே :மீண்டும் எப்போது ஊருக்கு திரும்பி வந்தீர்கள்?

ப :1996ம் ஆண்டு சித்திரை மாதம் திரும்பி வந்து சங்கத்தில் இணைந்து இன்றுவரை தொழில் செய்து வருகின்றேன்.

கே :இறுதியாக, சங்கத்தைப் பற்றி நீங்கள் உங்கள் சக அங்கத்தவர்களுக்கு கூற விரும்புவது?

ப :எனது வாழ்க்கை இவ்வளவு தூரம் சிறப்பானதாக அமைந்ததற்கு காரணம், நான் சங்கத்தில் இணைந்து, சங்கத்திற்கும் எனது தொழிலுக்கும் விசுவாசமாகவும் நேர்மையாகவும் செயற்பட்டமையே ஆகும். எனவே அங்கத்தவர்கள் எல்லோரும் சங்கத்திற்கும் தாங்கள் செய்யும் இத்தொழிலுக்கும் விசுவாசமாக நடந்துகொண்டால் உடனடியாகவும் நீண்ட காலத்திலும் எமக்கும் எமது பிள்ளைகளுக்கும் சங்கத்தால் அளப்பரிய நன்மைகள் கிடைக்கும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

நன்றி.

## தெரிந்து கொள்ளுங்கள்!

- *அந்தமான் தீவுகளில் மொத்தம் 204 தீவுகள் அடங்கியுள்ளன.*
- *தரையில் ஒரு மைல் தூரம் என்பது கடலில் 5280 அடிகள்.*
- *உலகில் சுதந்திரம் பெற்றுள்ள தீவுகள் 32.*
- *உலக நாடுகளில் 78 நாடுகள் மரண தண்டனை முறையினை ஒழித்து விட்டன.*
- *மரண தண்டனையை நிறைவேற்றுபவரை 'அலுகோசு' என அழைப்பர்.*
- *லண்டனில் இருந்து வெளிவரும் பத்திரிகை ஒன்றின் பெயர் "OK"*
- *அரிசி ஏற்றுமதியில் முன்னணி வகிக்கும் நாடு தாய்லாந்து.*
- *முட்டையில் இல்லாத ஒரே விற்றமின் 'சி' ஆகும்.*
- *பாலில் இல்லாத ஒரே சத்து இரும்புச் சத்து.*
- *குதிரைகளுக்கு 18 சோடி விலா எலும்புகள் உள்ளன.*
- *110மீ தடை ஓட்டப் போட்டியில் 10 தடைகள் வைக்கப்பட்டிருக்கும்.*
- *உணவில் உப்புக் குறைந்தால் உடலில் தளர்ச்சி ஏற்படும், அசதியும் சோர்வும் உண்டாகும்.*
- *எலும்புகளின் வளர்ச்சிக்கு விற்றமின் 'டி' அவசியம்.*

**"மக்களின் ஆரோக்கிய வாழ்வுக்கு பனை வெல்லம் போன்ற வேறெந்த இனிப்பும் கிடையாது. வைத்தியர்கள் என்னைப் பனம் வெல்லம் சாப்பிடச் சொல்லியிருக்கிறார்கள். நான் தினமும் பனை வெல்லம் சாப்பிட்டே வருகின்றேன். பனை மரங்கள் இருக்கும் இடமெல்லாம் பனை வெல்லம் சுலபமாக தயாரிக்கலாம். வறுமையை இந்நாட்டிலிருந்து விரட்டுவதற்கு இதுவே வழியாகும்."**

**– மஹாத்மா காந்தி–**

எமது உற்பத்தியான பனை வெல்லத்தை விற்பனை செய்து எமது சங்க அங்கத்தவர்களின் வருமான மேம்பாட்டுக்காக உதவி வரும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றி களை தெரிவித்துக்கொள்கின்றோம். குறிப்பாக கூட்டுறவு நகர் மூலம் பனை வெல்ல விற்பனை யை மேற்கொண்ட ப.நோ.கூ. சங்கங்களுக்கும் எமது நன்றி கள்.

தொடர்ந்து வருடம் முழு வதும் மக்களுக்காக எமது உற்பத்திகள்!

### எமது உற்பத்திகள்!

- பனை வெல்லம்
- பனம்பாணி
- கல்லாக்காரம்
- புழுக்கொடியல்
- ஒடியல்
- பனாட்டு
- பாணிப் பனாட்டு
- பதநீர்

### பனை வெல்லத்தின் உயிர் சத்துக்களும் ஊட்டச்சத்துக்களும்!

| | |
|---|---|
| சீனிச்சத்து | 92.760 |
| இரும்புச்சத்து | 4.70 |
| புரதம் | 0.20 |
| இரும்பு | 1.40 |
| கல்சியம் | 0.58 |
| பொஸ்பரஸ் | 0.005 |
| உயிர்சத்து சி (அஸ்கோபிக் அமிலம்) | 11mg |
| உயிர்சத்து பி (தயமைன்) | 0.21mg |
| உயிர்சத்து (றிபோபிளேவின்) | 432mg |
| நிக்கோடினிக் அமிலம் | 5.24mg |

**தொடர்ந்தும் பனைசார் உற்பத்தியில் முன்னோடிகள் நாமே!**

## பண்டத்தரிப்பு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ–து)

இப்பத்திரிகை சமரீசப் பதிப்பகத்தினால் அச்சிடப்பட்டு இல.52, சோமசுந்தரம் வீதி, சுண்டிக்குளியில் உள்ள வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் 2008ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் வெளியிடப்பட்டது.